பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 28 வியாழக்கிழமை (10-04-1997) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 134

# நிபந்தனையுடன் பேச்சுகள் நடத்த தயாரில்லை என புலிகள் அறிவிப்பு!

## படை வாபஸ் பெற்று இயல்பு நிலை திரும்ப வேண்டும் என அறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 10

பேச்சுவார்த்தைகளுக்கு முன் நிபந்தனையாக புலிகள் கணிசமான அளவு ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்கமுடியாது என்று விடுதலைப் புலிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் எந்தச் சூழ்நிலையிலும் இப்படிப்பட்ட எந்த நிபந்தனையையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதே எமது நிலைப்பாடு என்று விடுதலைப் புலிகள் அமைப்பின் லண்டன் பேச்சாளரான அன்ரன் ராஜா விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை நேற்றிரவு பி.பி.சியில் ஒலிபரப்பானது.

விடுதலைப் புலிகள் சமாதானத்தை எதிர்க்கவில்லை. தேசியப் பிரச்சினைகளுக்கு சமாதான முயற்சிகளின் மூலம் தீர்வு காண்பதையும் எதிர்க்கவில்லை.

இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசுகளும் தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்ததால், பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடிய சுமுக நிலை ஏற்படும் பட்சத்தில் அனைத்துலக மத்தியஸ்தம் வேண்டும் என விடுதலைப் புலிகள் அமைப்பு வற்புறுத்தி வந்தது. இராணுவக் கெடுபிடிகள் நெருக்கடிகள் இல்லாத சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் போரின் தீவிரத்தைக் குறைப்பதற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### உடன்பாட்டில் கையொப்பமிட ரணில் காட்டிய பிடிவாதம்!

கொழும்பு, ஏப். 10

இனப்பிரச்சினை தொடர்பாக அரசுக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டில் கையொப்பமிட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் செல்ல ஐ.தே.க. தலைவர் மறுப்புத் தெரிவித்தார் என்ற தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

(2ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




அப்ப பெரும் பாடு பட்டுத் தான் உடன்பாடு வந்திருக்கு போல......!

### தமிழ்க்கட்சிகள் சந்திப்பு

ஐந்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இன்று வியாழக் கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இனங்களுக்கு இடையேயான நல்லிணக்க செயலணிக் குழுவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய தமிழ்க் கட்சிகள் அதன் தொடர்ச்சியாகவே இன்று எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கவுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் பேச்சில் கலந்து கொள்வர் (ஐ)

### புத்தாண்டையொட்டி இரவுநேர ஊரடங்கு தளர்த்தப்படலாம்

கொழும்பு, ஏப். 10

எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் இரவு நேர ஊரடங்கு தளர்த்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அன்றைய தினம் இரவு நேர ஊரடங்கைத் தளர்த்துமாறு வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி ஜெனரல் கருணாதிலகவுக்கு அவர் 'பக்ஸ்' மூலம் செய்தி அனுப்பியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட சோமபால குணதீரவைச் சந்தித்துக் கலந்துரையாடிய இந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கிச் சூட்டு காயத்துடன் சடலம்

யாழ்ப்பாணம், ஏப். 10

மூன்று நாட்களுக்கு முன் இறந்ததாகக் கூறி, அழுகிய துர்நாற்றம் வீசிய நிலையில், இனந்தெரியாத சடலம் ஒன்று, சாவகச்சேரிப் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 25 வயது மதிக்கத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றை கலைத்து தேர்தல் நடத்த அமைச்சர்கள் சிலர் ஆதரவு

கொழும்பு, ஏப். 10

இம்மாத முடிவில் நாடாளுமன்றத்தைக் கலைத்து திடீர் பொதுத் தேர்தலை நடத்தும்படி செல்வாக்குள்ள சில அமைச்சர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு யோசனை கூறி உள்ளனர்.

இப்படி ''மிட்வீக் மிரர்'' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமோக வெற்றி பெற்ற பிரதேசங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் மிக நெருக்கமாக உள்ளனர்.

அந்த அமைச்சர்களே ஜனாதிபதிக்கு இந்த யோசனையை வழங்கியுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஆனைக்கோட்டைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டில் மாணவன் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 10

ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம் பெற்ற கிரனேட் வீச்சு, அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்ததாக ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலீ

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவனின் மரணம் குறித்து நீதி விசாரணை வேண்டும்

#### ஈ. பி. டி. பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 10

ஆனைக்கோட்டையில் கடந்த 8 ஆம் திகதி பாடசாலை மாணவன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக உடன் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இரா

(8 ஆம் பக்கம் பார்க்க)

### விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ் இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட கல்லூரி ஆசிரியர் உட்பட நால்வரும் விடுவிக்கப்பட்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவு கடலில் மோதல்

கொழும்பு, ஏப். 10

முல்லைத்தீவுக்கு வட – கிழக்கே விடுதலைப்புலிகளின் கடற்படைப்பிரிவு அமைந்துள்ள சாலை என்னும் பகுதி மீது கடற்படையின் பீரங்கிப்படகுகள் நேற்றுக்காலை தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்புலிகளின் 40 படகுகள் நிர்மூலமாக்கப்பட்டன

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இரவு அழைத்துச் செல்லப்பட்டவர் மறுநாள் சடலமாக மீட்பு

#### நுணாவிலில சம்பவம்

தென்மராட்சி, ஏப். 10

இனந்தெரியாதோரால் இரவு நேரம் வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் அடுத்த நாள் காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நுணாவிலில் இடம்பெற்றது.

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

ஆசிரிய சேவையில் 25 ஆண்டுகளைத்
தன்னடக்கத்துடன் பூர்த்திசெய்த

**செல்வி யோகேஸ்வரி கந்தையா**
(B.A. (Cey). Dip- in Ed. M.A.)
(உப அதிபர், யா/ இந்து மகளிர் கல்லூரி)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

— அன்பர்கள்

கந்தர்மடம். (46289)

# கண்ணீர் அஞ்சலி

செல்வன்
**கணபதிப்பிள்ளை பிரதீபன்**

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய சிரேஷ்ட மாணவ தலைவன்

செல்வன் கணபதிப்பிள்ளை பிரதீபன்

8-4-97 இல் அகால மரணம் அடைந்தார்.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
வர்த்தக சங்கம்.

(9503)

# மரண அறிவித்தல்கள்

## நல்லம்மா(சின்ராசு) விசுவலிங்கம்

(உரும்பிராய் கிழக்கு)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி நல்லம்மா(சின்ராசு) விசுவலிங்கம் அவர்கள் 9-4-97 புதன் கிழமை காலை சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் மு. விசுவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், விஜயரூபி (சுவீஸ்), சிவலோகநாதன் (கனடா), இன்பராணி (கொழும்பு), திரவியராணி (கனடா), சந்திரலீலா (பிரான்ஸ்), கலாநிதி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேந்திரன், எலிசபேத், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் கந்தசாமி, அன்ரனி, கமலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகாமி, சிறீராஜ், கஸ்தூரி, கங்காசுதன், காயித்திரி, ஜெயறோம், ஜெயறா, யேசுவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு.விசுவலிங்கம்
(கணவர்)

உரும்பிராய் கிழக்கு,

(46288)

## திருமதி ஞானாம்பிகை நாகலிங்கம்

பன்னாலை, தெல்லிப்பளை காலஞ்சென்ற நீதிபதி பூ. வைத்திலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி க. நாகலிங்கம் (M. O. H) அவர்களின் அன்பு மனைவியும், லலிதாதேவி கனகசேகரன், செல்வதேவி இராமச்சந்திரன் (U. S. A), செல்வி சிறீதேவி (உக்கு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தம், கமலாம்பிகை, நடேசரத்தினம் ஆகியோரின் சகோதரியும், ரமணன், யசோதரா, அரவிந்தன், ராகுலன் ஆகியோரின் பாட்டியும், அஷ்வினி குமார், சுஹாசினி, ஷர்மெதா, சுவாதி ஆகியோரின் பூட்டியுமாகிய ஞானாம்பிகை அமெரிக்காவில் (4-4-97) காலமானார். இறுதிக்கிரியைகள் (6-4-97) 30, செல்சி ஸ்றீற், 403 APT – எவரெட் MA 02149 U. S. A இல் இந்து முறைப்படி நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினருக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
ந. கனகசேகரன்
(மருமகன்)

351, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(46292)

## நடராசா கனகேஸ்வரி

சாவகச்சேரி சங்கம் வீதியைச் சேர்ந்த நடராசா கனகேஸ்வரி 7 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நடராசாவின் (இளைப்பாறிய எரிபொருள் நிலைய ஊழியர், சாவகச்சேரி) அன்புமனைவியும், லோகேஸ்வரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), நகுலேஸ்வரி (கொழும்பு), சண்டேஸ்வரன் (I. C. M A. கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிர்காமநாதம் (Auditor, கொழும்பு), கமலதேவி ஆகியோரின் சம்பந்தியும், கீதா, குமுதா, யோகராணி ஆகியோரின் மாமியாரும், கனகம்மாவின் சகோதரியும், வைகுந்தவாசன் (கணேஸ் குளிர்பான நிலையம், சாவகச்சேரி), நடேசபிள்ளை (கனடா), கணேசமூர்த்தி (இத்தாலி) ஆகியோரின் சிறியதாயாரும், லவர்ணன், தீபன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 08- 04- 97 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. நடராசா
(கணவர்)

(சி/471)

## பாலர் பள்ளி மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 10

கரவெட்டி 'ரலன்ற் இன்ஸ்ரிரியூட்'' பாலர் பள்ளி மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 2.00 மணிக்கு நிறுவன மைதானத்தில் நிறுவனத்தின் மூத்த ஆசிரியரும் ஓய்வுபெற்ற அதிபருமான சி. வேலாயுதம் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

## அதிபர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 10

தேசிய கல்வி நிறுவகத்தால் எதிர்வரும் 26 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட இருக்கும் அதிபர்களுக்கான பாடசாலை முகாமைத்துவ பயிற்சி அனுமதிப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## கப்பல் பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 10

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 500 பயணிகளுடன் கப்பல் சேவையை இன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 203 முதல் 560 வரை உள்ளவர்களை இன்று காலை ஏழு மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 10

1995 ஆம் ஆண்டு நடந்த எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் 5 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் கிடைக்காதவர்கள் யாழ். செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (இ-3)

## வாக்கெடுப்பில் பங்குபற்றாது

இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என லங்கா சமசமாஜக் கட்சி தீர்மானித்துள்ளது.

## உடன்பாட்டில்..

(முதலாம் பக்கத் தொடர்)

உடன்பாட்டில் கையொப்பமிட ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு வருமாறு பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் முதலில் ரணிலிடம் கேட்டார்.

அதற்கு ரணில் மறுத்து விட்டார்.

பின்னர் பிரிட்டிஷ் தூதரகத்துக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த அழைப்பையும் ரணில் ஏற்கவில்லை.

பின்பு வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அதனையும் ரணில் ஏற்கவில்லை.

இறுதியில் லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டுக்கு வர ரணில் சம்மதித்தார். அங்கு சென்றே அவர் உடன்பாட்டில் கையொப்பமிட்டார் என்று கூறப்படுகிறது.

(இ-3-150)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா படைவீரசிங்கம்

சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த செல்லையா படைவீரசிங்கம் 08 - 04 - 97 இல் அகால மரணமானார்.

இவர் திரு. திருமதி செல்லையா - அபிராமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திரு. திருமதி அருளானந்தம் அவர்களின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், தபோதினி, சுமித்திரன், சுபோதினி, உதயகுமார், ஹரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிராம் அவர்களின் மாமனாரும், லோகீசனின் பேரனும், மாசிலாமணி, குமாரசாமி, நடராசா, துரைராசா, மதியாபரணம், மகேஸ்வரி (மணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அற்புதஅருந்தவராஜா, கலாநாதன், கணேந்திரன், கமலா, சுசீலாதேவி, மனோரதி, இராதா, இராசமணி, பொன்னம்மா, காந்திமதி, சரஸ்வதி, பாலசுப்பிரமணியம், விக்கினேஸ்வரராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-04-97) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
செல்வி அருளானந்தம்
(மைத்துனி)
(யாழ். பல்கலைக்கழகம்)

(46291)

## கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

மாதகல் விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும், மாதகல் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை 8-4-97 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வபாக்கியத்தின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற அழகம்மா மற்றும் தேவராசா, ஜெயபாலன், கமலாதேவி, வசந்தகுமாரி (சுவிஸ்), கிருஷ்ணானந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9-4-97 புதன் கிழமை மாதகலில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
தேவராசா
(மகன்)

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

(46285)

## சிற்றம்பலம் சரவணமுத்து

மாதகல் விபுலானத்தர் வீதியைப் பிறப்பிடமாகவும், கனகராயன் குளத்தில் வசித்தவருமாகிய சிற்றம்பலம் சரவணமுத்து (இளைப்பாறிய விவாகப் பதிவாளர், கல்முனை) 07- 04- 97இல் வவுனியாவில் காலமானார்.

இவர் இரத்தினாம்பாளின் அன்புக் கணவரும், கந்தசாமி (இளைப்பாறியவர் R D.O), காலஞ்சென்ற முருகேசபிள்ளை (L C D/F I. இளைப்பாறியவர்), காந்தம்மா, சின்னம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இராசையா மற்றும் திருநாவுக்கரசு பரராசசிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஜெயமனோகரன் மற்றும் ஜெயபவானி, ஜெயகௌரி, (ஆசிரியை, கனகராயன்குளம்), ஜெயகலா (ஜேர்மனி), ஜெயகாந்தன் (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன் (தபால் ஊழியர், சுழிபுரம்), புவனேந்திரராசா (ஆசிரியர், கனகராயன்குளம்), வில்வராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனகராயன்குளத்தில் மகளின் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. ஜெயபவானி
(மகள்)

(49290)

## கந்தையா சந்திரதாஸ்

(Carson Camberbatch)

கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும், நல்லூர், சாவகச்சேரி, வெள்ளவத்தை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டவரான கந்தையா சந்திரதாஸ் அவர்கள் கனடாவில் 6-4-97 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் வதனலட்சுமியின் பாசமிகு கணவனும், அமரர் கந்தையா, திருமதி க. தங்கரத்தினம் ஆகியோரின் தவப்புதல்வனும், சாவகச்சேரி தம்பிப்பிள்ளை, திருமதி சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், ஜனகன், திருமதி சந்திரிக்கா இராசலிங்கம் ஆகியோரின் அருமைத்தந்தையும், திருமதி ஜனகன், இராசலிங்கம் ஆகியோரின் மாமனாரும், துரைரட்ணம், செல்வராஸ், திருமதி கமலா மகேஸ்வரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், திருமதி துரைரட்ணம், திருமதி செல்வராஸ், அமரர் மகேஸ்வரன், திருமதி ம. சிவஞானம், திருமதி யோகலட்சுமி நாகேந்திரன், மு. பாலசிங்கம், அமரர் மு. கணேசலிங்கம், திருமதி ஸ்ரீகாந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ம.சிவஞானம்

கெருடாவில்,
சாவகச்சேரி.

(சி/469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய- பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் பேச்சு

புதுடில்லி, ஏப். 10

இந்திய - பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர்கள் நேற்றுக் காலை புதுடில்லியில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே குஜ்ராலும் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அயூப்கானும் சுமார் ஒன்றரை மணிநேரம் நடத்திய பேச்சுக்கள் சுமுகமான முறையில் நடைபெற்றன என்று அறிவிக்கப்பட்டது.

இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் வெகு விரைவில் இஸ்லாமாபாத்திலும் அடுத்த சுற்றுப் பேச்சுக்களை நடத்த உள்ளனர். (ஐ)

# ஹவாலா ஊழல் வழக்கில் அத்வானி, சுக்லா விடுதலை

65 கோடி ரூபா சம்பந்தப்பட்ட ஹவாலா ஊழல் வழக்கில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிஷன் அத்வானி மற்றும் முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான வித்யா சரண் சுக்லா ஆகியோருக்கு எதிரான சி. பி. ஐ. வழக்குகளை டில்லி உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மிகப்பெரும் எண்ணிக்கையில் மக்கள் நிரம்பியிருந்த நீதிமன்ற அறை ஒன்றில் நீதிபதி மொஹமட் சமீன் இந்தத் தீர்ப்பை அறிவித்தார்.

இந்த இரண்டு தலைவர்களும் சட்டவிரோதமான வகையில் கைம்மாறாக பணம் பெற்றுக்கொண்டதாகவும் —

கிறிமினல் சதி வேலைகளில் ஈடுபட்டதாகவும் —

ஹவாலா வழக்கு பற்றி விசாரித்த சிறப்பு நீதிமன்றம் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் சரியானவையே என்று நிரூபித்துக் காட்டுவதற்கு போதிய ஆவணங்களும் சான்றுகளும் இல்லை என்று டில்லி உயர் நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ- 5)

## காஷ்மீரில் பஸ் விபத்தில் 31 பயணிகள் பலி

ஸ்ரீநகர், ஏப். 10

இந்தியாவில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் பயணிகள் பஸ் ஒன்று பள்ளத்தாக்கில் விழுந்ததில் குறைந்தது 31 பயணிகள் கொல்லப்பட்டார்கள்; 20 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## சோப்ராஜ் பிரான்ஸில் கைது

பாரிஸ், ஏப். 10

இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஆசியாவின் பிரபல குற்றவாளி சாள்ஸ் சோப்ராஜ் பாரிஸ் விமான நிலையத்தில் பிரான்ஸியப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

20 ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்றுக்கு புதுடில்லியில் விஷம் கொடுத்துக் கொலை செய்ய முயன்ற வழக்குத் தொடர்பாக இந்தக் கைது நடந்தது.

எனினும் சோப்ராஜ் சிறையில் அடைக்கப்படவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-10)

## சவுதியில் ஈராக் யாத்திரிகர்கள்

மெக்கா, ஏப். 10

சுமார் ஆயிரம் ஈராக் யாத்திரிகர்கள் ஹஜ் புனிதயாத்திரைக்காக சவுதி அரேபியாவின் மெக்கா, மதீனா நகர்களுக்குச் சென்றுள்ளனர்.

வளைகுடா யுத்தத்துக்குப் பின் முதன் முறையாக ஈராக் நாட்டு யாத்திரிகர்களுக்கு சவுதி அரேபியா இனிய வரவேற்பு நல்கியது.

இம்மாதம் 12–17 ஆம் திகதிக்குள் சுமார் 20 லட்சம் இஸ்லாமிய யாத்திரிகர்கள் மெக்கா நகரில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-10)

# ஸயர் முழுவதும் நெருக்கடி நிலை

## அதிபர் முபுட்டு பிரகடனம்

ஸயரின் இரண்டாவது பெரிய நகரமான லுபும்பாஸியை கைப்பற்றுவதற்காகக் கிளர்ச்சிப்படைகள் தீவிரமாக முன்னேறி வருவதை அடுத்து தலைநகர் கின்ஸாசாவில் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

இதனையடுத்து ஸயர் அதிபர் முபுட்டு செசி சீக்கோ நாடு முழுவதும் அவசரகால நிலையை பிரகடனப் படுத்தியுள்ளார்.

தன்னால் அண்மையில் பதவி நீக்கப்பட்ட பிரதமருடனான பூசலில் அதிபர் முபுட்டு தன்னிச்சையாகச் செயற்பட இந்த நெருக்கடி நிலை அவரை அனுமதிக்கும் என்றும்—

ஆயினும் அதிபரின் இந்த நெருக்கடி நிலைப் பிரகடனத்தை இடைக்கால நாடாளுமன்றமும், உச்ச நீதிமன்றமும் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

உலக அரங்கில்

இதேவேளை — லுபும்பாஸி நகர் எந்நேரமும் கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்படும் நிலை நீடிக்கிறது. நகருக்கு அருகே ஷெல் மற்றும் பீரங்கிச்சத்தங்கள்தொடர்ந்து கேட்டவண்ணம் உள்ளன.

இதற்கிடையில்—

தென்னாபிரிக்காவில் பிறிட்டோரியாவில் இரகசிய இடமொன்றில் நடந்து கொண்டிருக்கும் பேச்சுக்களில் கிளர்ச்சியாளர்கள் கை ஓங்கி இருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

மத்திய ஆபிரிக்க நாடான ஸயரின் பெரும் பகுதியை கிளர்ச்சியாளர்கள் தம்வசம் தக்க வைத்துக் கொண்டுள்ள நிலையிலும், 1965 ஆம் ஆண்டுமுதல் பதவி வகித்துவரும் அதிபர் முபுட்டு கிளர்ச்சியாளர்களுடன் இணங்கிப் போக மறுத்து வருகிறார். (ஐ-10)

## முதல்வர் கருணாநிதி தெரிவித்த

# தீ மிதித்தல் பற்றிய கூற்றால் தமிழகத்தில் கிளம்பியசர்ச்சை

சென்னை, ஏப். 10

இந்து ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற தீமிதிப்புச் சம்பவம் தொடர்பாக தமிழக முதல்வர் மு. கருணாநிதி வெளியிட்ட கருத்து தமிழகத்தில் சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

பண்ணாரி அம்மன் என்கின்ற இந்துக் கோயில் ஒன்றில் நடந்த வைபவத்தில் தமிழக அமைச்சர் அந்தியூர் செல்வராஜ் அடியார்கள் பலருடன் சேர்ந்து தீ மிதித்தார்.

தனது அமைச்சர் ஒருவரின் இந்த நடத்தையை முதல்வர் கருணாநிதி திருமணச் சடங்கு ஒன்றில் கலந்து கொண்ட சமயம் கடுமையாக விமர்சித்தார்.

''அமைச்சர் செய்தது காட்டுமிராண்டித் தனமான செயல்'' என்று கருணாநிதி விமர்சித்தார்.

தீ மிதித்தல் என்கிற சமயச் சடங்கை 'காட்டுமிராண்டித்தனம்' என்று முதல்வர் கூறிய கூற்று பலதரப்புகளிலும் இருந்தும் கடுமையான எதிர் விமர்சனத்துக்கு உட்பட்டுள்ளது.

முதல்வரின் இக்கூற்று பல இந்துக்களிடம் ''உண்மையிலேயே தீயை மிதித்தது'' போன்ற கொதிப்பு உணர்வை ஏறபடுத்தி இருப்பதாக விமர்சகர் ஒருவர் தெரிவித்தார்.

பின்னர் தமிழக சட்டப் பேரவையிலும் இப்பிரச்சினை கிளப்பப்பட்டபோது விவாதத்தில் சூடு கிளம்பியது

தொன்று தொட்டு இருந்து வரும் இத்தகைய பிரார்த்தனை முறையை 'காட்டு மிராண்டித்தனம்' என்று முதல்வர் கூறியிருப்பது மக்களிடையே மனக் குமுறலையும் வேதனையையும் உருவாககி இருப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் தெரிவித்தனர்.

''தீயிட்டுப் பொசுக்க வேண்டிய மூட நம்பிக்கைகள் இந்து மதத்தில் நிறைய உள்ளன என்று சுவாமி விவேகானந்தரே கூறியுள்ளார். அவரது வழியில் முதல்வர் கருத்துக் கூறியிருப்பதில் தவறில்லை'' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் வேலாயுதம் கூறினார்.

முதல்வர் கருணாநிதி பின்னர் தனது கூற்று குறித்து விளக்கமளித்தார்.

பல நெருப்புகளைப் பல்வேறு காலகட்டங்களில் கடந்துதான் தி. மு. க ஆட்சியைப் பிடித்தது. என்னுடைய அமைச்சர்கள் தீ மிதித்துத்தான் இந்த ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. ஜனநாயகத்தை தூக்கி நிமிர்த்த வேண்டும் என்பதற்காகவே நாங்கள் முன்னர் ஆட்சியை இழந்தோம். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற முயன்றும் ஆட்சியை இழந்தோம். இப்போது பகுத்தறிவுக்காக மீண்டும் ஆட்சியை இழக்கவும் நாம் தயார் — என்று கருணாநிதி தெரிவித்தார். (ஐ)

# தேவ கௌடா அரசு தப்பிப் பிழைக்குமா?

## நம்பிக்கை வாக்கெடுப்பு நாளை

புதுடில்லி, ஏப். 10

இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணிக்கும் இந்திய தேசிய காங்கிரஸுக்கும் இடையேயான அரசியல் இழுபறி இன்னமும் முடிவுக்கு வராத நிலையில் ஆளும் ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்து விடும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

காங்கிரஸின் சவால்களை ஆளும் ஐக்கிய முன்னணி எதிர்கொள்வது கடினம் என்றும் எனவே அரசு கவிழ்ந்து விடும் என்றும் ஐக்கிய முன்னணி அரசின் உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஆளும் ஐக்கிய முன்னணியின் பிரதமர் பதவியை மாற்றப் போவதில்லை என்று ஐக்கிய முன்னணித் தலைவர்களும் —

பிரதமர் தேவகௌடாவை நீக்கும் வரை அரசுக்கு ஆதரவு அளிக்கப் போவதில்லை என்று இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவர்களும் கடந்த 10 நாள்களாகத் திட்டவட்டமாகக் கருத்துத் தெரிவித்து வந்த நிலையில் ஆளும் ஐக்கிய முன்னணி மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு இந்திய நாடாளுமன்றத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

காங்கிரஸுக்கும், ஐக்கிய முன்னணிக்கும் இடையே இறுதி உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கான முறையான பேச்சுவார்த்தைகள் நேற்று மாலை ஆரம்பமாக இருந்தன.

ஐக்கிய முன்னணியின் வழிகாட்டல் குழுவின் கூட்டமும் நேற்று மாலை டில்லியில் நடைபெற இருந்தது.

இறுதிக் கட்டத்தில் உடன்பாடு ஒன்று ஏற்பட்டு விடும் என்பதில் நம்பிக்கை அற்ற நிலையே நீடிப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் மத்தியில் அரசமைக்க பாரதீய ஜனதாக் கட்சி தயாராக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாளைய நம்பிக்கை வாக்கெடுப்பில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு டாரதீய ஜனதாக் கட்சி அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கண்டிப்பாக அழைத்துள்ளது.

காங்கிரஸ் கட்சியுடன் பேச்சு நடத்த முறையான யோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை ஆளும் ஐக்கிய முன்னணி காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரிக்கு நேற்று முற்பகல் அனுப்பிவைத்தது.

மத்திய நலவாழ்வுத்துறை அமைச்சர் இக்கடிதத்தை கேசரியிடம் கையளித்தார்

காங்கிரஸுடனான பேச்சுக்கள் எந்நேரமும் ஆரம்பமாகும் என்று சந்திரபாபு நாயுடு தெரிவித்தார். (ஐ)

# வெங்காயம், புகையிலை, கடலட்டை மாஹோவில் ஏற்றப்படுகின்றன

வடமராட்சி, ஏப். 10

பொருள்களை இறக்கி முடித்த மாஹோ கப்பலில் வெங்காயம், புகையிலைச் சிப்பங்கள் என்பனவற்றை ஏற்றும்பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது.

பருத்தித்துறை பழைய பஸ் நிலையப்பகுதியிலுள்ள தனியாரின் களஞ்சியங்களில் வைத்து படையினரின் முன்னால் வெங்காயம், புகையிலைச் சிப்பங்கள் பொதி செய்யப்பட்டு லொறிகளில் ஏற்றப்பட்டு நேராக பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கப்பலில் ஏற்றப்படுகின்றன.

இன்னும் சில தினங்களில் மாஹோகப்பல் வெங்காயம், புகையிலைச் சிப்பங்கள், கடலட்டை என்பனவற்றுடன் கொழும்பு நோக்கிச் செல்லும். (ஐ-173)

## வேலை வங்கி படிவங்கள்

தென்மராட்சி, ஏப். 10

தொழில் வங்கி மூலம் வேலை வாய்ப்புகிகான படிவங்கள் வழங்குவது ஏப்ரல் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதால் இப்படிவத்தினை இதுவரை பெற்றுக் கொள்ளாத வேலையற்றோர் தத்தமது பிரிவு பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# போஷாக்கு புனர்வாழ்வு நிலையம் நாளை முதல் குருநகரில் ஆரம்பம்

வடமராட்சி, ஏப். 10

போஷாக்கில்லாத குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் போஷாக்கு உணவு வழங்குவதற்கென யாழ். மாநகரப் பகுதியில் மூன்று போஷாக்கு புனர்வாழ்வு நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

முதலாவது போஷாக்கு புனர்வாழ்வு நிலையம் நாளை வெள்ளியன்று குருநகரில் திறந்து வைக்கப்படும்.

மற்றைய இரு நிலையங்களும் கொட்டடி, அரியாலை ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்படும்.

போஷாக்கு உணவுகளை வழங்குவதற்கான உதவிகளை இலங்கை கிறிஸ்தவ திருச்சபையின் பிள்ளைகள் நலன்காக்கும் பிரிவு வழங்குகின்றது. (ஐ-173)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கை வங்கி

### ஊரகாவற்றுறை

இதுவரை யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த எமது ஊர்காவற்றுறைக் கிளை 23-04-1997 (புதன்கிழமை) காலை 10.30 மணிமுதல் வேலணை பிரதேச சபைக் காரியாலயம் இயங்கும் வீதியில் அமைந்துள்ள 466 ஆம் இலக்கக் கட்டடத்திலிருந்து தனது பணியினைத் தொடரும் என்பதை எமது சகல வாடிக்கையாளருக்கும் அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ். பிரதேசம்.

(சி/468)


## வறுமை நிவாரண கொடுப்பனவு

வடமராட்சி, ஏப். 10

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் வறுமை நிவாரணம் பெறுவோருக்கு தை, மாசி மாதங்களுக்கான கொடுப்பனவுகள் தபால் நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

(ஐ-173)

## ஆங்கில தினம்

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆங்கில தின நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரதம விருந்தினராக திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் கலந்து கொள்வார்.

(ஐ-1)


## ★ புத்தாண்டில் மலிவு விற்பனை ★

காலத்திற்கேற்ப, கவர்ச்சிக்கேற்ப நவீன டிசைன்களில் பாட்டா, D. S. I, றன்பா பாதணிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் நிதான விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்:

**கபிலா காலணியகம்**

4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(9498)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 23 — 09 — 1949

இறப்பு: 10 — 04 — 1993

### அமரர் கந்தையா புவனேந்திரன்

ஆண்டு நான்கு ஆனதோ — இன்று
குண்டு உமைக் கொன்று அரவணைத்து,
மீண்டும் மீண்டும் நாம்
மிகப் பல கஷ்டங்களைக் கண்டோம்
பூண்டோடு போகாதோ — இந்த
புண்படுத்தும் புனித யுத்தம்
சாந்தி, சமாதானம் வேண்டி
சாவை அணைத்த உம்
வேண்டுதலில் நாம் இன்றும்
வேகுகின்றோம் உம் நினைவால்,
ஆத்ம சாந்திக்கு எமை அர்ப்பணிக்கின்றோம்

துயரால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

91/5, இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

(46219)


# INSTITUTION OF POWER TECHNOLOGY

## தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

### ஆரம்பம்: 19-04-1997

சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி (புதிய நேரம்)

### DIPLOMA IN ELECTRICAL TECHNICIAN

1. Principle of Electricity (AC, DC)
2. Electronic principles
3. Magnetism
4. D. C Machines (Calculation & winding technology)
5. A. C Machines (Calculation & winding technology)
6. Electrical Installation Works
   - ★ Domestic ★ Industrial ★ Auto
   - ★ Marine ★ Aircondition & Refrigeration
7. Three phase
   - ★ Generation Transmission ★ Distribution
   - (Hightension & Lowtension)

**DURATION: 6 MONTHS**

### ELECTRICAL WIRING - மின் இணைப்பு

1. Fundamental of Electricity (அடிப்படை மின்னியல்)
2. Principle of Electricity (மின்சாரத்தின் வகைகள்)
3. House wiring (Single Phase) வீட்டு மின்சுற்று
4. Solar system சூரியகல மின்
5. Industrial wiring (Three phase) தொழிற் கூட மின்சுற்று

**DURATION: 3 MONTHS**

### CIVIL DRAUGHTSMANSHIP AND QUANTITY SURVERING

1. Engineering Drawing
2. Builders Quantity
3. Draughtsmanship
4. Building Construction
5. Civil Engineering Material

**DURATION: 6 MONTHS**

### REWINDING TECHNOLOGY

1. Principle of Electricity (அடிப்படை மின்னியல்)
2. Magnetism & Coils (காந்தப்புலமும் வரிச்சுருளும்)
3. A/C Machines (ஆடலோட்ட மின்னியந்திரங்கள்)
4. D/C Machines (நேரோட்ட மின்னியந்திரங்கள்)
5. Three Phase Machines (மூவவத்தை மின்னியந்திரங்கள்)
   (சகலவிதமான Transformers, Motors, Generators, Aramachers, Table Fans, Celling Fans ......மீளமுறுக்குதல்)

**DURATION: 4 MONTHS**

**SHORTHAND and TYPING (English** (சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்)
**ENGLISH LANGUAGE and GRAMMAR** (ஆங்கில மொழியும் இலக்கணமும்)
**SINHALA LANGUAGE and GRAMMAR** (சிங்கள மொழியும் இலக்கணமும்)

- இந்தப் பயிற்சி நெறிகளைப் பயில ஆர்வமுள்ளோர் விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுப் பதிவுசெய்து கொள்ளவும்.
- பயிற்சிக் கட்டணங்களைத் தவணை அடிப்படையிலும் செலுத்தலாம்.
- வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோருக்கும், வன்செயலால் பாதிக்கப்பட்டோருக்கும் கட்டணத்தில் சலுகை உண்டு.

மேலதிக விவரங்களுக்கு:

**DIRECTOR,**
**Institution of Power Technology,**

ஆசிரியர் வீதி,
பெரிய அரசடி,
சாவகச்சேரி.

Teachers Road,
Periya Arasady,
Chavakachcheri.

(C/466)


## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மரியாம்பிள்ளை செல்லத்துரை

(இளைப்பாறிய M. S. அலுவலர், யாழ். தபாற் கந்தோர்.)

இறப்பு:- 10-04-1989

பாசம் நிறைந்த ஐயா! நீங்கள் இவ் உலகை விட்டுப்பிரிந்து எட்டு வருடங்கள் கடந்து விட்டன. உங்கள் நினைவு எங்கள் மனதைஎன்றும் வேதனைப்படுத்துகின்றது.

உங்கள் நினைவில் வாடும்:
மனைவி, பிள்ளைகள்

40/05, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(46232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுடன் மனந்திறந்து பேசுவதற்கு புலிகள் இப்போது முன்வரவேண்டும்

## அமைச்சர் ஜெயரத்தினா அழைப்பு

இன்றைய அரசியல் சூழ் நிலையைப் பயன்படுத்தி அரசாங்கத்துடன் மனந்திறந்து பேச்சு நடத்த தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வரவேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜெயரத்தினா இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் மீது எமக்கு எவ்வித குரோத எண்ணமும் இல்லை; மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த நாம் தயாராக உள்ளோம். ஆனால் அவர்களும் இது பற்றி மனந்திறந்து பேச வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு — என்றும் அவர் தெரிவித்தார்.

அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே ஏற்பட்ட இணக்கத்தை அடுத்து சமாதானப் பேச்சுவார்த்தையின் அறிகுறியாக பிறக்கப்போகும் தமிழ், சிங்கள புத்தாண்டை ஒட்டி வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்று பிரகடனப்படுத்தப்படுமா என்று அவரிடம் கேட்கப்பட்ட போது —

''அப்படியான விடயம் குறித்து எதுவும் பேசப்படவில்லை'' என்று அமைச்சர் பதிலளித்தார்.

புலிகள் இயக்கத்தினருடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்காக இந்த இணக்கம் ஏற்படவில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் தான் இரு கட்சிகளுக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் சொன்னார். (ஐ)

★ ஈழப் பிரச்சினையில் பிரிட்டனின் தலையீடு

# ஆசிய நாட்டவரின் வாக்குகள் ஆளுங்கட்சிக்கு கிடைக்க வாய்ப்பு

கொழும்பு, ஏப். 10

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் பிரிட்டன் தலையிட்டுள்ளமையால், எதிர்வரும் முதலாம் திகதி நடக்கும் தேர்தலில் ஆளுங் கன்சர் வேட்டிவ் கட்சி ஆசிய நாட்டவரின்வாக்குகளை கூடுதலாகப்பெற வாய்ப்பு உருவாகி இருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

எதிர்வரும் முதலாம் திகதி நடக்கும் பிரிட்டனின் பொதுத் தேர்தலில் தற்போது ஆட்சியில் உள்ள கன்சர் வேட்டிவ் கட்சிக்கும், தொழிற் கட்சிக்கும் இடையில் கடும்போட்டி நிலவுகிறது.

இலங்கை விவகாரத்தில் தலையிட்டு அரசாங்கத்துக்கும்ஐ.தே.கவுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்துவதில் வெற்றி கண்டதன் மூலம் பிரிட்டனில் ஆசிய நாட்டவரின் வாக்குகளை கன்சர் வேட்டிவ்கட்சி கூடுதலாகப் பெறும் நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

வெளிநாட்டுக் கொள்கை விடயத்தில் பிரிட்டனுக்கு கிடைத்த வெற்றி இது என கன்சர் வேட்டிவ் கட்சி பிரசாரம் செய்ய வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும் கூறப்பட்டது. (ஐ-3-150)

# விவாகம் செய்ய வயதெல்லை 18 ஆக உயர்த்தப்பட்டது

## மாவட்ட பதிவாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 10

விவாகம் செய்வதற்கான சட்டபூர்வ வயதெல்லை 18 ஆக உயர்த்தப் பட்டுள்ளதாக யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. என். சதாசிவஐயர் அறிவித்துள்ளார்.

பொது விவாகப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின்படி விவாகம் பதிவு செய்வதற்கான வயதெல்லை ஆண்களுக்கு 16 என்றும் — பெண்களுக்கு 12 எனவும் நடைமுறையில் இருந்தது.

1995 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க விவாகத் திருத்தச் சட்டத்தின்படி 18 - 10 - 95 ஆம் திகதிக்குப் பின்னர் திருமணம் செய்வோர் 18 வயதை நிறைவுசெய்ய வேண்டும் எனத் திருத்தப் பட்டுள்ளது.

18 வயதைப் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே விவாகப் பதிவு செய்ய முடியும்.

18 வயது பூர்த்தியடைந்திருப்பினும் 21 வயது பூர்த்தியடையும்வரை பெற்றோரின் சம்மதம் இன்றி விவாகப்பதிவு செய்து கொள்ள முடியாது — இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-3)


வலயம் 1 இன் முறைசாராக் கல்விப் பிரிவினர்
நடத்தும்

## படவரைஞர் பயிற்சி நெறி

பாடசாலையைவிட்டு நீங்கிய மாணவர் நலன்கருதி
**யா / வண்ணை நாவலர் ம. வியில்**

மேற்படி பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. க. பொ. த. (சா/த) பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்தியுடன், ஆறுபாடங்களில் சித்தியடைந்தவர்கள் 28-04-1997 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். இவை சம்பந்தமான மேலதிக விவரங்களை பாடசாலையில் அறிந்து கொள்ளலாம்.

நயினை. எஸ். சோமேஸ்வரபிள்ளை
உப அதிபர், யா/ வண்ணை நாவலர் ம. வி.

(9497)



## கண்ணீர் அஞ்சலி

எமது
பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களும்,
பழைய மாணவர்களுமான
திரு. அன்னலிங்கம் அன்னராசாவின்
அன்புத்தாயாரும்
திரு. பாலதுரை ஜெயாகரனின்
அன்பு மாமியாருமான
**திலகவதி அன்னலிங்கம்**
அவர்களது திடீர் மறைவு குறித்து
அவரது பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், உறவினர்களுக்கு எங்களது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியைகள், தொண்டராசிரியைகள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
(9499) யா| தம்பாட்டி அ. த. க. வித்தியாலயம்


### நீரிறைக்கும் இயந்திரங்கள் விநியோகம்

வடமராட்சி, ஏப். 10

புலோலி கமநலசேவை நிலையத்தில் மிகக் குறுகிய காலப் பகுதிக்குள் 25 நீரிறைக்கும் இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டன.

விவசாயிகள் மிக ஆர்வத்துடன் இந்நீரிறைக்கும் இயந்திரங்களைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கினர். (ஐ-173)

### சிறுவர் பாடசாலை

யாழ். இராசாவின் தோட்டம் வீதியில் ''அசம்பிளி ஒவ் கோட்'' (தேவசபை) ஆலய நிர்வாகிகளால் சிறுவர் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இங்கு அவர்களின் வட பிராந்திய அலுவலகமும் இயங்கி வருகின்றது. (ஐ-30)

### நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

உரும்பிராய், ஏப். 10

உரும்பிராய் - ஊரெழு பிரதேச சபை அலுவலகத்தில் இயங்கும் சித்த வைத்திய சாலையில் தினமும் நோயாளர்கள் நிரம்பி வழிகின்றனர். உரும்பிராயில் இயங்கும் அரசினர் மத்திய மருந்தகம் சீராகச் செயற்படாமையினால் நோயாளர்கள் சித்த வைத்தியரை நாடுவதாகத் தெரிகிறது. (ஐ-154)

# பிரதேச செயலகங்களில் கலாசார அலுவலர்கள்

## புதிதாக அறுவர் நியமனம்

தென்மராட்சி, ஏப். 10

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட உள்ளனர். பிரதேச செயலகங்களில் பணிபுரிந்த பயிலுநர் பட்டதாரிகளுக்கு கலாசார உத்தியோகத்தர்களாக வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 03-02-97 முதல் செயற்படுமாறு நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளபோதிலும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத் துறைச் செயலாளரிடம் பதவியைப் பொறுப்பேற்கவேண்டுமென நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பதவிக்கென பயிலுநர் பட்டதாரிகளாகப் பணியாற்றிய ஆறுபேருக்கு நியமனக் கடிதங்கள் கிடைத்துள்ளன. (ஐ-117)

### மாநகர ஆணையாளர் திரும்பினார்

கொழும்புத்துறை, ஏப். 10

இந்திய அரசாங்கத்தின் கீழான மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நகர அபிவிருத்தி முகாமைத்துவப் பயிற்சிக்கான 3 மாதகால புலமைப் பரிசிலைப் பெற்று. இலங்கையில் இருந்து சென்ற யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் திரு. வே.பொ. பாலசிங்கம் அப்பயிற்சி நெறியை முடித்துக்கொண்டு மீண்டும் யாழ். திரும்பியுள்ளார். (ஐ-30)

## செய்திச் சாரம்

### உரும்பிராய் வெற்றிலை விரைவில் சந்தைக்கு

உரும்பிராய், ஏப். 10

உரும்பிராய்ப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வெற்றிலைச் செய்கை நல்ல பயனளிக்கத் தொடங்கியுள்ளது. இன்னும் சில மாதங்களில் இங்கு உற்பத்தியாகும் வெற்றிலை சந்தைக்கு விற்பனைக்கு வரவுள்ளது.

வெற்றிலைச் செய்கைக்குப் பெயர் போன மாவிட்டபுரம், கொல்லன்கலட்டிப் பிரதேசத்திலிருந்து மக்கள் வெளியேறியதனால், கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் வெற்றிலையை நம்பிஇருக்க வேண்டிய நிலை தற்போது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதனால் வெற்றிலையின் விலையும் அடிக்கடி உச்சத்திற்குச் செல்லும். (ஐ-154)

### பொருள்களின் விலைகளில் வேறுபாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணத்தில் பொருள்களின் விலை கடைக்குக்கடை வேறுபட்டுக் காணப்படுகிறது.

யாழ். வணிகர் கழகம் குறிப்பிட்ட சில பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து ஏற்கனவே அறிவித்த போதிலும், சில கடைகளில் நிர்ணய விலையிலும் பார்க்க கூடுதலான விலைக்கே பொருள்களை விற்பனை செய்து வருகிறார்கள். (ஐ-173)

### வீதி திருத்தம்

வடமராட்சி, ஏப். 10

பருத்தித்துறை நகர சபையால் தம்பசிட்டியிலிருந்து புலோலிமேற்கு பண்டாரி அம்மன் கோயிலுக்குச் செல்லும் வீதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

### பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ். மாநகரப் பகுதியிலுள்ள வறிய மாணவர்களுக்கு யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்புச் செய்தது.

வட்டத்தின் சார்பில் யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் திரு. ரி. எம். அன்ரனிப்பிள்ளையும் அவரது பாரியாரும் இவ்வுபகரணங்களை அண்மையில் வழங்கினர். (ஐ-173)

### புதிய உழவு இயந்திரம் வந்தது

வடமராட்சி, ஏப். 10

புலோலி கமநலசேவை நிலையத்துக்கென புதிய உழவு இயந்திரம் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

கலப்பைகள், பெட்டி என்பவவற்றுடன் வந்த சேர்ந்துள்ள இந்த உழவு இயந்திரம் விவசாயிகளின் தேவைக்கென வாடகைக்கு விடப்படும். (ஐ-173)

### ரயில் நிலைய பகுதியில் மிதி வெடி மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். ரயில் நிலையப் பகுதியில் இருந்த மிதிவெடிகள் பலவற்றை படையினர் அப்புறப்படுத்தியுள்ளனர்.

இப் பகுதியில் அண்மைக்காலமாக மிதிவெடியில் சிக்கிப் பலர் தமது கால்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-173)

### முறைசாரா பயிற்சி நெறி

வடமராட்சி, ஏப். 10

யாழ். கல்விவலயம் இரண்டின் முறைசாராக்கல்விப் பிரிவினால் நடத்தப்படும் தமிழ் தட்டச்சுப் பயிற்சி நெறி கட்டைவேலி ஞானாசாரியார்கல்லூரியில் இம்மாதம் 15ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

### சதாவதானி நினைவு போட்டிகள்

வடமராட்சி, ஏப். 10

தமிழையும், சைவத்தையும் வளர்த்த அறிஞர் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குரு பூசை தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, மனனம், கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இம் மாதம் 19 ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறும் இப்போட்டிகளை மேலைப் புலோலி கதிரவேற்பிள்ளை சன சமூக நிலையம் ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-173)

### உள்ளிப் பூடு விலை உயர்வு

உரும்பிராய், ஏப். 10

உள்ளிப் பூடின் விலை அதிகரித்துள்ளது. அத்துடன் தட்டுப்பாடும் நிலவுகிறது. இப் பகுதியில் சில வர்த்தக நிறுவனங்களில் மட்டும் உள்ளி கிலோ 280 ரூபாவாக விற்பனையாகிறது.

சில வாரங்களுக்கு முன்பு இதன் விலை 80 ரூபாவாக மட்டுமே இருந்தது. (ஐ-154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

E. T. 900 Yamaha ஜெனரேட்டர், 2K.W. டைனமோ ம. சுரேந்திரஜித், 183, சென்.ஜேம்ஸ் லேன், யாழ்ப்பாணம். [46278]

முதிரை அலுமாரி, முதிரை மேசை, பிள்ளைத் தொட்டில், Dressing Table விற்பனைக்கு உண்டு. 87, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [9484]

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி, Ling Lending Library, சாவகச்சேரி. (45932)

### சோதிடப்பலன்

சோதிட ஞானி சண்மாஸ்ரர் எழுதிய 97-98 புத்தாண்டு (12 ராசிகள்) பலாபலன் நூல், இப்போது எங்கும் கிடைக்கின்றது. கேட்டு வாங்குங்கள். ஜோஸ்யர் புத்தகசாலை, யாழ்நகர். [46224]

### மணப்பெண் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 29 வயதுடைய அரச சேவையில் பொறுப்பு வாய்ந்த பதவியில் கடமையாற்றும் B.Sc. பட்டதாரி மணமகனுக்கு, பெற்றோர் அழகிய மணப்பெண்ணைத். தேடுகின்றனர். மே/பா இல 603, 'உதயன்' யாழ்ப்பாணம். [46235]

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்), விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை. [43756]

### மணமகன் தேவை

30 வயதுடைய, ஆசிரியைக்கு மணமகன் தேவை. பட்டதாரி எனில் வேலை அற்றவராயினும் விரும்பத்தக்கது. சாதகக் குறிப்புடன் கடிதமூலம் தொடர்பு கொள்க, மே/பா இல.605, 'உதயன்' யாழ்ப்பாணம். [46271]

### மாறிஎடுபட்ட துவிச்சக்கரவண்டி

தேவகிதேனுமதி சண்முகலிங்கம் ஆகிய எனது துவிச்சக்கரவண்டி (லுமாலா) இலக்கம் GCC86047 (6-4-97) ஞாயிற்றுக்கிழமை வேம்படிச் சந்தி தொலைத் தொடர்பு நிலையத்தில் தவறிவிட்டது. பதிலாக 55737616 இலக்க துவிச்சக்கரவண்டி காணப்பட்டது. மாறி எடுத்தவர்கள் வைரவர் கோயிலடி, பலாலிறோட், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும். [9493]

## இருவர் கைது

கொழும்பு, ஏப்.10

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றும் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் மூவர் தமது இயக்கத்திற்கு பணம் சேகரிப்பதற்காக வெளிநாட்டுக்குச் செல்ல இந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தார்கள் என அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (உ-4)

---

# வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்

ஆசிரிய சேவையில் வெள்ளிவிழாக் கண்ட எமது பாடசாலை ஆசிரியர்களான

**திருமதி பா. சிவராஜதேவா**
**திருமதி ப. சிவகுமாரன்**
**திருமதி சி. அருமைநாயகம்**

ஆகியோர் சகல சிறப்புக்களையும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர் மன்றம்.

**யா/வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை.**

(46277)

---

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 31 — 12 — 1960

உதிர்வு: 21 — 03 — 1988

**திதி: 10 - 04 - 97**

## திருமதி உமாபதி தவம்

எங்கள் அன்புத்தெய்வமே! காலம் எத்தனை சென்றிடினும்
ஒன்பதாண்டு சென்றாலும் உங்கள் அன்பு முகம் நீங்கவில்லை.
அழியாத நினைவலைகள் எம் மனதைவிட்டு அகலவில்லை.
எப்பிறப்பில் இப் பிரிவுத்துயர் எமைவிட்டுத் திருமோ?
உமதுஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**அம்மா, அண்ணா,
அண்ணி, மருமகன்,
உறவினர்கள்.**

பாடசாலை வீதி,
நாவற்குழி,
கைதடி.

(46267)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஞாபக ஆராதனையும்



தோற்றம்: 10 — 03 — 1926

மறைவு: 12 — 03 — 1997

## திருமதி பரிமளம் ஜோனா

(காலஞ்சென்ற காரைநகர் அதிபரும், சமாதான நீதிவானின் பாரியாரும், ஆபிரகாம் சாராளின் ஏக புத்திரியும்.)

எம் பிறப்பில் மகிழ்ந்தாயே
உம் அணைப்பில் அசைந்தோமே
எம் முகத்தைக் காணாமல்
எங்கு நீர் சென்றீரோ?

11 - 04 - 97 பி. ப. 2-00 மணியளவில் இணுவில் தேவாலயத்தில் (வைத்தியசாலை) நடைபெறும் ஞாபக ஆராதனையிலும், தேநீர் உபசரணையிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**ஜோ. ஐ. ஜெயரத்தினம் (மகன்)**

இணுவில் மேற்கு,
சுன்னாகம்.

(9495)

---

உ

மீசாலை

# திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்

# திருப்பணி நிதிசேகரிப்பு

விநாயக அடியார்களே!

புனருத்தாரணப் பணிகள் செய்வதற்காக மேற்படி ஆலயம் **09 - 02 - 97** இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. **08-06-97** இல் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் ஆலய திருப்பணிச் சபையின் சாவகச்சேரி மக்கள் வங்கியிலுள்ள இல. **2670** கணக்கில் வைப்பிலிடுமாறும் அல்லது கோயில் முகாமையாளரிடம் வழங்குமாறும் வேண்டுகின்றோம்.

**ஐ. மாணிக்கவாசகர்**
தலைவர்

**அ. கயிலாயபிள்ளை**
செயலாளர்

(46264) **திருப்பணிச்சபை.**

---

வேலணை

# தெங்கு பனம்பொருள் உ.வி. கூட்டுறவுச் சங்கம்

# விசேட பொதுக்கூட்டம்

## 24-04-1997

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 24-04-1997 வியாழக்கிழமை முற்பகல் 11-00மணிக்கு மேற்படி சங்கத் தலைமை அலுவலகத்தில் தலைவர் திரு. சு. சிவனேசன் அவர்களது தலைமையில் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**நிகழ்ச்சி நிரல்:**

1. இறை வணக்கம்
2. தலைமை உரை
3. சங்கத்திற்கான புதிய துணை விதியை ஆராய்ந்து அங்கீகரித்தல்
4. மொத்தக் கடன் எல்லையை நிர்ணயித்தல்
5. சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு விவரங்கள் ஆராய்தல்
6. கொழும்பு பொருள் கொள்வனவு பற்றி ஆராய்தல்
7. பிரதம விருந்தினர் உரை:
   **திரு. கா. பரநிருபசிங்கம் அவர்கள்**
   (கூ.அ உ. ஆணையாளர் - ப.தெ. வளம்)
8. சிறப்பு விருந்தினர் உரை
9. புதிய நெறியாளர் குழுவைத் தெரிவுசெய்தல்
10. நன்றியுரை

அங்கத்தவர்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**ம. நடராசா**
செயலாளர்

(46274)

---

# 31 ஆம் நாள் நினைவலையில்



அன்னை மடியில்: 17 — 09 — 1969

ஆண்டவன் அடியில்: 11 — 03 — 1997

## திருமதி குமுதினி நித்தியானந்தன் (பபி)

(48, பிறேசர் அவனியூ, தெஹிவளை.)

குல விளக்கே குமுதினியே பபியம்மா
குமுறியழும் இதயங்கள் துடிக்குதம்மா
கலகலப்புச் சிரிப்பெங்கே போனதம்மா
கனிமொழியும் கருணையுமோ கலைந்ததம்மா
நிலவுலகில் நினைவலையில் நிறைந்தாயம்மா
நீயில்லா முப்பத்து ஓராம் நாள் அம்மா
நலந்தருமுன் இறையருளின் பக்தியம்மா
நற்கதியைத் தானுனக்குக் காட்டுமம்மா.

உன் பிரிவால் வாடும்:
**கணவன், பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்கள், உறவினர்.**

க. கமலேஸ்வரன் (சிறிய தந்தை)
'சந்திர மஹால்'
வதிரி, அல்வாய்.

(46265)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நல்ல தருணம்

★ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சியில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் உடன்பட்டுள்ளனர்.

★ இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் விடயத்தில் அரசுத் தரப்புக்கும் புலிகளுக்கும் இடையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராகச் செயற்பட பிரிட்டன் முன்வந்துள்ளது. இந்த மத்தியஸ்தத்தை ஏற்க சம்பந்தப்பட்ட தரப்புகள் இணங்கியிருக்கின்றன:

— இவ்வாறு கடந்த சில நாள்களாக வெளிவந்த செய்திகள் இனப்பிரச்சினையால் களைத்துப் போயிருக்கும் இலங்கை மக்களுக்கு சற்று மனத்தெம்பைத் தருவனவாக இருக்கின்றன.

ஆனாலும் மறுபுறத்தில் இந்த விவகாரங்களை ஒட்டி அரசுத்தரப்புப் பிரமுகர்கள் மற்றும் சிரேஷ்ட பேச்சாளர்கள் அவ்வப்போது வெளியிடும் கருத்துக்கள் குழப்பத்தைத் தோற்றுவிப்பவையாகவும் கிலேசத்தை ஏற்படுத்துபவையாகவும் உள்ளன. இது பற்றி இதே பத்தியில் சில தினங்களுக்கு முன்னரும் குறிப்பிட்டிருந்தோம்.

இத்தகைய கருத்துக்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுவது கானல்நீராகவே காட்சியளிப்பதை உறுதிப்படுத்துகின்றன.

இதற்கிடையில் —

''இன்றைய அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசுடன் மனந் திறந்து பேச புலிகள் முன்வர வேண்டும்''— என்று அழைப்பு விடுக்கிறார் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் டி. எம். ஜயரத்தின.

ஆனால் ''சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் புலிகள் முதலில் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும்; அரசு விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உடன்பட வேண்டும்'' — என்னும் பழைய பல்லவியைப் பாட அவர் தவறவில்லை.

இந்தப் பழைய பல்லவி பலனளிக்காமல் போனதால் தானே பிரிட்டனின் சமரசத் தலையீடு போன்ற புதிய வழியை நாடவேண்டி வந்தது?

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போன்று பழைய பிடியிலேயே அரசுத் தரப்பு நிற்குமாயின் தீர்வு விரைந்து கிட்டுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

சம்பந்தப்பட்ட தலைவர்கள் துணிந்து முடிவுகளை எடுத்து, தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டு, தீர்வைக் காண முயற்சிக்க வேண்டிய மிகச் சிறந்த — இறுதியான — காலகட்டம் இதுதான்.

புத்தாண்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்குமாறு ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்டிருக்கும் வேண்டுகோளும் இத்தகைய வழியில் ஒன்றே.

தன்னுடைய தற்றுணிவை வெளிப்படுத்தவும் —

தற்போது தீர்வு மழையைப் பொழிவதற்காகக் கருக்கட்டி வரும் சந்தர்ப்ப சூழ்நிலைக் கருமேகங்களை மேலும் தீவிரமடைய வைப்பதற்கும் —

ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ள ஒரு வாய்ப்பு இது: பயன்படுத்துவாரா?

# வெலிக்கடைச் சிறையில் உள்ள 16 தமிழ் பெண்களின் பெயர் விவரம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 தமிழ்ப் பெண்களின் விவரங்கள் ஈ. பி. டி. பியின் யாழ். அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ ஜெயசோதி ரோசாவதி — மாவடி வீதி, அச்சுவேலி தெற்கு. (இவர் 9-5-96 இல் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்)

★ கீதா தம்பிராசா — கச்சாய் வீதி, கொடிகாமம். (இவர் 4 – 5-96 இல் கைது செய்யப்பட்டார்),

★ உதயமலர் தியாகராசா (மாணவி) — நாவற்குழி.

★ குணரத்தினம் சாந்த மேரி — கோமாரி, கொடிகாமம். (இவர் சாவகச்சேரியில் 9-5-96 இல் கைது செய்யப்பட்டார்).

★ மரியதாஸ் அருள் சூரியகலா — 4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. (இவர் 14-4-96 இல் பருத்தித்துறையில்கைது செய்யப்பட்டார்).

★ தியாகராசா கிரியா — கைதடி, நாவற்குழி. (இவர் 19-7-96 இல் கைதடியில் கைது செய்யப்பட்டார்).

★ சரவணை ரஜனி சிதம்பரப்பிள்ளை — கைதடி, நாவற்குழி. (இவர் 19-7-96 இல் கைதடியில் கைது செய்யப்பட்டார்.)

★ ஐயப்பன் புஸ்பராணி — மாங்குளம்.

★ ஐயாத்துரை இந்திராணி — நெல்லியடி, கரவெட்டி. (இவர் 12 - 11 – 95 இல் கொழும்பில் கைது செய்யப்பட்டார்).

★ ரோகினி சண்முகசாமி — ஸ்ரேசன் வீதி, மல்லாகம். (இவர் 9-8-96 இல் கைது செய்யப்பட்டார்)

★ பஞ்சலிங்கம் பேபி அன்னா — பெரிய தம்பிரான் கோயிலடி, வண்ணார் பண்ணை (இவர் 18-6-96 இல் தாண்டிக்குளத்தில் கைது செய்யப்பட்டார்).

★ விமலாதேவி மகாலிங்கம் — கம்பர் மலை, வல்வெட்டித்துறை. (இவர் 28-8-95 இல் கொழும்பில் கைது செய்யப்பட்டார்).

★ சிவகஜனி சிவஞானசிங்கம் — சூராவத்தை, சுன்னாகம். (இவர் 2 - 1 - 96 இல் கைது செய்யப்பட்டார்).

★ செல்லையா விமலேஸ்வரி சாவகச்சேரி. (இவர் 9-5-96 இல் கொடிகாமத்தில் கைது செய்யப்பட்டார்)

★ வல்லிபுரம் சுவர்ணலதா — மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (இவர் 9-3-96 இல் நுணாவிலில் கைது செய்யப்பட்டார்).

★ நல்லையா தவராணி — கோப்பாய் தெற்கு, கோப்பாய். (இவர் 20-7-96 இல் நல்லூரில் கைது செய்யப்பட்டார்). (ஐ-3)

# பொதுமக்கள் மீதான தாக்குதல்கள்: 'புளொட்' கண்டனம் தெரிவிப்பு

யாழ். நகரின் சில இடங்களில் படையினரால் பொதுமக்கள் தாக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதுமான சில சம்பவங்கள் குறித்து புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். நகரின் சில முன்னரங்கப் பாதுகாப்பு அரண்களில் கடமையில் ஈடுபட்டுள்ள படையினர் அப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களைத் தாக்குவதாகவும் துன்புறுத்துவதாகவும் தெரிய வருகிறது. இதனால் மக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் நிலவுகிறது. யுத்தக் கொடுமையினால் இடம்பெயர்ந்து மீண்டும் மீளக் குடியமர்ந்துள்ள மக்களைத் தாக்குவது, அச்சுறுத்துவது போன்ற செயல்களுக்கு புளொட் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இது குறித்து 'புளொட்' அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு சில சம்பவங்களை ஆதாரம் காட்டி கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

★ கடந்த 06-04-97 ஞாயிற்றுக்கிழமை மாலை கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலைய உறுப்பினர்கள் தமது கிராமத்தின் சமூக முன்னேற்றம் குறித்து சேவையாற்றுவதற்கான கலந்துரையாடல் ஒன்றுக்காக புளொட் அமைப்பினரையும் அழைத்துக் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தார்கள். இக்கூட்டம் முடிவடைந்த பின்னர் சனசமூக நிலையத்தின் தலைவர் இரவு 9 00 மணியளவில் அப்பகுதி இராணுவ அதிகாரியினால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதுடன் அந்த நிலையத்தின் கொடியும் எரிக்கப்பட்டு நிலையம் இயங்க அனுமதியும் அந்த இராணுவ அதிகாரியினால் மறுக்கப்பட்டது.

★ கொட்டடி நாவாந்துறைப் பகுதிகளில் சீவல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை தொழில் செய்யக்கூடாது என எச்சரித்து அவர்கள் தொழிலுக்காகப் பயன்படுத்தும் கருவி (கத்தி)களையும் பறித்துச் சென்றுள்ளனர்.

★ முதலாம் குறுக்குத் தெருவில் கடலோரமாக அமைந்துள்ள ஸ்ரீ ஞானவைரவர் மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கடந்த 02 - 04 - 97 இல் இருந்து பூஜை செய்வதற்கோ, வழிபாடு செய்வதற்கோ அனுமதிக்க முடியாது என அப்பகுதி இராணுவத்தினர் அச்சுறுத்தி உள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடராமல் இராணுவ உயர் அதிகாரிகள் உடன் கவனத்தில் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த அப்பகுதி பிரிவு இராணுவப் பொறுப்பு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்று மாணிக்கதாஸன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரச ஊழியர் சம்பளம்

தமிழ் — சிங்கள புத்தாண்டையொட்டி அரச ஊழியர்களின் இம்மாதச் சம்பளம் இன்று 10 ஆம் திகதி வழங்கப்படும். (இ-100)

# தேசிய சேமிப்பு வங்கி வெற்றிடங்கள் நிரப்பப்படும்

கொழும்பு, ஏப். 10

வடக்கு கிழக்கில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் நிலவும் உத்தியோகத்தர் பற்றாக்குறை விரைவில் நீக்கப்படவுள்ளது.

1991 — 1992 காலப் பகுதியில் நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டு இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன என நிதி திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய சேமிப்பு வங்கிகளில் நிலவும் சில குறைபாடுகள் பற்றி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு கடந்த பெப்ரவரி மாதம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கடிதத்திற்கு நிதி திட்டமிடல் அமைச்சு பதில் அளிக்கையிலேயே இவ்வாறு அறிவித்துள்ளது. (ஐ-4)

## நாளை

**பங்குனி 29**

**வெள்ளிக்கிழமை**

திதி: சதுர்த்தி நண்பகல் 12.05 வரை.

நட்சத்திரம்: ரோகிணி பின்இரவு 2.11 வரை.

சுபநேரம்: 6.06-7.36

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஏப். 10

நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளன.

மாலை 3மணிக்கு வசந்த மண்டப பூசை, பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல் பூசை என்பனவற்றைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை உடுப்பிட்டி கீதாலயா இசைக் குழுவினரின் பக்திப் பாடல்கள் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை தொண்டமனாறு மகாவித்தியாலய ஆசிரியர் திரு. இராசிறி நடராசா நிகழ்த்துவார். (ஐ-173)

★ ★ ★

புளியங்கூடல் செருத்தனைப்பதி மகாமாரி அம்மன் கோயில் 108 சங்காபிஷேகமும் குளிர்த்தியும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் வருடாந்த கன்வென் ஸனும், தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும் இம் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை சுண்டுக்குளியிலுள்ள சபைச்செயலகத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-173)

★ ★ ★

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இம் மாதம் 16 ஆம் திகதி புதன் கிழமை இராம நவமி உற்சவம் நடைபெறும்.

அன்றைய தினம் பகல் 1008 சங்காபிஷேகமும் மேளக்கச்சேரியும் நடைபெறும்.

★ ★ ★

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோயில் கார்த்திகைத் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

மாலையில் முருகன் வள்ளி-தெய்வானை சமேதராக வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

கொழுப்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு பூர்வ பட்ச சதுர்த்தித் திருவிழா நடைபெறும்.

மாலை 4-30 மணிக்கு பெருமான் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில் அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

★ ★ ★

திருநெல்வேலி, ஏப். 10

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி விநாயகர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை உருத்திர அபிஷேகம் நடைபெறும். (இ-135)

## பதில் இராணுவ தளபதி நியமனம்

கொழும்பு, ஏப். 10

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் றொஹான் தளுவத்தை வெளிநாடு சென்றுள்ளதை அடுத்து பதில் இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் எச். எஸ். ஹப்பு ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி முதல் இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஹவாய் தீவு சென்றுள்ள இராணுவத் தளபதி புதுவருடத்தின் பின்னரே நாடு திரும்புவார். (இ-ஐ-10)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 10

கச்சாய் அரசினர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு அதிபர் அ. அகிலதாஸ் தலைமையில் வித்தியாலய கலையரங்கில் நடைபெறும். (இ-4)

## மின் மாற்றி தகர்ப்பு

வவுனியா, ஏப். 10

நேற்று முன்தினம் இரவு பூந்தோட்டம் பகுதியில் மின் மாற்றி ஒன்று இனந் தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. (இ-3)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கான மார்ச் மாத சம்பளக் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை கன்னாதிட்டி வீதியில் உள்ள யாழ். பணிமனையில் வைத்து வழங்கப்பட உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நவீனத்துவம்
(Post Modernism)

பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா
(தலைவர், மெய்யியல் துறை)

யாழ். பல்கலைக்கழக
கலைவட்டத்தின் ஆதரவில்
பொருளியல் மண்டபம்
11-04-1997 மாலை 2-30 மணி

அன்பளிப்பு:
கல்யாணி கிறீம் ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (46272)



# உடன் வரவும்

பூநகரி ப. நோ. கூ. சங்கத் தலைவர்
கா. கார்த்திகேசு அவர்களை

ஜெயபுரத்தில் அமைந்துள்ள பூநகரி ப. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர் திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம், திரு. தா. அரியரட்ணம், கிராஞ்சி கிராம அலுவலர் திரு. சண்முகதாசன் ஆகியோர் உடன் வரும்படி அன்புடன் அழைக்கின்றார்கள்.

தயவு கூர்ந்து திரு. கா. கார்த்திகேசு அவர்கள் தங்களுக்குரிய கடிதத்தை சர்வதேச 'கெயர்' யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. குகதாஸ்.

(46280)



# அறிவித்தல்

உரும்பிராய் கற்பக விநாயகர் சி. க. கூ. சங்கத்தில் எண்பார்வை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் நிலையான வைப்பிலிட்டவர்கள் தமது நிலையான வைப்புச் சான்றிதழ்களை **20-4-97** க்கு முன் சங்கக் காரியாலயத்திற்குக் கொண்டுவந்து தங்களது வைப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- தலைவர்,
உரும்பிராய் கற்பக விநாயகர்
ஐக்கிய நாணய சங்கம்.
(46287)



யா\வல்வை
மகளிர் மகாவித்தியாலயம்,
வல்வெட்டித்துறை.

கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு
நடத்தும்
தமிழ் - தட்டச்சு, சுருக்கெழுத்து
வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.
விண்ணப்ப முடிவு திகதி 15 - 04 - 1997
- அதிபர்

(சி-470)



# கண்ணீர் அஞ்சலி

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின்
தொண்டர் ஆசிரியர்
செல்வி பிறேமராணி கணபதிப்பிள்ளை
அவர்களின் அன்புத்தம்பி
செல்வன் கணபதிப்பிள்ளை பிரதீபன்
(யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய
O/L மாணவன்)

அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(46286)



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையைச் சேர்ந்த மாணவன்
சிவராஜா மணிவண்ணன்

07-04-97 இல் அளவெட்டியில் அகால மரணமடைந்துள்ளார். இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ அருணாசலம் வித்தியாலயம்,
அளவெட்டி. (9501)


# கொலம்பியா தரையிறங்கியது

புளோறிடா, ஏப். 10

அமெரிக்க விண்கலமான ''கொலம்பியா'' எரிபொருள் இணைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தனது பயணத்தை இடையில் முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் புளோறிடா வான் ஆராய்ச்சித் தளத்தில் வந்து இறங்கியது.

இந்தக் கலத்தின் 16 நாள் பயணம் 10 நாள்களாக சுருக்கப்பட்டது. இந்தக் கலத்தில் இருந்த 7 வான்வெளி வீரர்கள் பவுத்திரமாகத் தரையிறங்கினார்கள்.

(ஐ-10)

## நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்)

வெற்றி பெறக் காரணமாக இருந்த அமைச்சர் மங்கள சமரவீரவும் அந்த அமைச்சர்களில் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த 3 மாதத்தில் தேர்தல் நடத்தவேண்டும் என்று அந்த அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் வற்புறுத்தி வருகின்றனர்.

''ஒருவாக்குப் பெரும்பான்மையுடன் அரசாங்கம் ஆட்சி செலுத்த முடியாது தேர்தலை நடத்தி பெரும்பான்மையைப் பெறவேண்டும், அதற்குச் சரியான சந்தர்ப்பம் இதுதான்'' என்று அவர்கள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என்று போட்டியிடாமல் சுதந்திரக்கட்சி என்று போட்டியிட வேண்டும் என்றும் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் சின்னமாக கதிரை சின்னத்தை விட்டுசுதந்திரக் கட்சியின் சின்னமான ''கை'' சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்றும் — அவர்கள் வற்புறுத்திவருகின்றனர்.

அதே நேரம் — பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் அமைச்சர்கள் தற்போதைய நிலையில் தேர்தல் நடத்துவது உகந்ததல்ல என்று கருத்து வெளியிட்டுள்ளார்கள் —

இப்படி அப்பத்திரிகை மேலும் கூறுகிறது.

(இ-3-150)

## நிபந்தனையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

துருப்புக்கள் வாபஸ்பெறப்பட்டு இயல்பு நிலை திரும்ப வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இப்படி அவர் கூறினார்.

இனப்பிரச்சினை தொடர்பாக சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் இடையில் சமீபத்தில் ஏற்பட்ட உடன்பாடு குறித்து அன்ரன் ராஜா கருத்துத் தெரிவிக்கையில இரு தலைவர்களும் இதனைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றார்.

(இ-10)

## விடுவிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

கல்லூரியில் கட்டடத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் இருவரும் மற்றும் காவலாளரும் நேற்று முன்தினம் இரவே — ஊரடங்கு வேளைக்கு முன் — விடுவிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்; கல்லூரி ஆசிரியர் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டார்.

(உ)

## துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்)

தக்க இச் சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

சடலம் இனங் காணும் பொருட்டும் மரணவிசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-15)

# வெளிநாட்டுத் தொலைபேசி கட்டணம் இன்று முதல் குறைப்பு

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாடுகளுக்கான தொலைபேசிக் கட்டணங்கள் இன்றில் இருந்து குறைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச தொலைத் தொடர்பு பணியகம் அறிவித்துள்ளது.

குறைக்கப்பட்ட புதிய கட்டணங்களில் இன்றில்இருந்து வேம்படி வீதியில் உள்ள சர்வதேச தொலைத்தொடர்பு பணியகத்தில் தொலைபேசி அழைப்புக்களைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

3 நிமிடத்துக்கான புதிய கட்டணங்களும் நாடுகளின் விவரங்களும் வருமாறு:-

★ அமெரிக்க ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றுக்கு—ரூபா 444. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் 361 ரூபா

★ நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், ஜப்பான், மலேஷியா ஆகியவற்றுக்கு 351 ரூபா. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் 289 ரூபா.

★ இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம் ஆகியவற்றுக்கு—ரூபா 234. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் 193 ரூபா.

(இ-3)

## ஆனைக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பிரதீபன் (வயது 16) என்றும் —

அவர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய 11 ஆம் ஆண்டு மாணவர் என்றும் — அடையாளம் காணப்பட்டது.

சடலத்தில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

பெயர், விவரம் அற்ற நிலையில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட இச் சடலம் பெற்றோர் ஆசிரியர்களாலேயே அடையாளம் காணப்பட்டது.

சடலம் விசாரணையின் பின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (இ 3-15-135)

## மாணவனின்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணுவ உயர் அதிகாரிகளைக் கேட்டுள்ளதாக ஈ. பி. டி. பி. அமைப்பு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்களின் தேவைகள் மற்றும் அவர்களின் பிரச்சினைகள் ஆகியவற்றை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் நோக்குடன் எமது அலுவலகச் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டுள்ளன.

குருநகர், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களில் மக்கள் தமக்கு நேருகின்ற பாதிப்புக்களை எடுத்துக் கூறலாம் — என்றும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## புத்தாண்டை...

(முதலாம் பக்கத் தொடர்)

மத குருமார்கள் மற்றும் தலைவர்கள், புத்தாண்டை ஒட்டி ஆலயங்களில் பிரார்த்தனைகளில் மக்கள் கலந்து கொள்ள வசதியாக இரவு நேர ஊரடங்கைத் தளர்த்தவேண்டும் என்று கோரியிருந்தனர்.

இக்கோரிக்கைக்கு ஏற்ப எதிர்வரும் 13 ஆம் திகதி இரவு ஊரடங்கு உத்தரவைத் தளர்த்துமாறு சோமபால குணதீர இராணுவ அதிகாரியைக் கேட்டுள்ளார். (ஐ)

## முல்லைத்தீவு கடல்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்றும்—

இத் தாக்குதலில் கடற்படைக்குச் சொந்தமான அதிவேகத் தாக்குதல் படகுகளும், பீரங்கிப்படகுகளும் பங்கு கொண்டன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

புலிகள் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் குறித்து உறுதியாக எதுவும் கூறமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இரவு அழைத்து...

(முதலாம் பக்கத் தொடர்)

செல்லையா படைவீரசிங்கம் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரின் சடலம் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு சுமார் 7. 30 மணியளவில் வீட்டில் இருந்தவேளை இனந்தெரியாத சிலர் படலையில் நின்று இவரைக் கூப்பிட்டதாகவும் —

இவர் எழுந்து சென்ற சில நிமிட நேரங்களில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் —

விடிந்ததும் தேடிப்பார்க்க முற்பட்டபோது வீட்டில் இருந்து சிறிது தொலைவில் அவரது சடலம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம், இக்கொலைக்குப் புலிகளே காரணம் என்று ஈ. பி. டி. பி. நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் குற்றஞ்சாட்டிஉள்ளது. (இ-15)


# கண்ணீர் அஞ்சலி

செல்வன்
கணபதிப்பிள்ளை பிரதீபன்

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய
வித்தியாலய சிரேஷ்ட மாணவ தலைவன்
செல்வன் கணபதிப்பிள்ளை பிரதீபன்

8-4-97 இல் அகால மரணம் அடைந்தார்.
இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை அ. ச.
பழைய மாணவர்கள்.

(9502)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org